397

397
1-5

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஸலவாத்துப் பாட்டு.

இதில்
கப்பற்பாட்டு, ஊஞ்சற்பாட்டு,
கும்மிப்பாட்டு, தாலாட்டு,
தோழிப்பெண் பாட்டு
அடங்கி யிருக்கின்றன.

குலசேகரப் பட்டணம்
சக்கரை ஸாஹிபுத்தம்பி அவர்களின் குமாரர்
அல்லாபிச்சைப் புலவர்
அவர்களால்

இலக்கணவிலக்கிய வழுவற திருத்தியபடி
பார்வையிட்டப் பிரதிக்கிணங்க

சென்னை திருவல்லிக்கேணி
ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
அவர்களால் தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

[illegible] 1951 [அணா 4.

21 FEB 1952
MADRAS

Q7:417
N51
114184

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# ஸலவாத்துப் பாட்டு.

இதில்

கப்பற்பாட்டு, ஊஞ்சற்பாட்டு,

கும்மிப்பாட்டு, தாலாட்டு,

தோழிப்பெண் பாட்டு

அடங்கி யிருக்கின்றன.

குலேசேகரப் பட்டணம்

சக்கரை ஸாஹிபுத்தம்பி அவர்கள் குமாரர்

அல்லாபிச்சைப் புலவர்

அவர்களால்

இலக்கணவிலக்கிய வழுவற திருத்தியபடி

பார்வையிட்டப் பிரதிக்கிணங்க

சென்னை திருவல்லிக்கேணி

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1951 [அணா 4.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது காயற்பட்டணம்

உதுமானயினார் லெப்பை புலவரவர்கள் பாடிய

# ஸலவாத்துப் பாட்டு.

## கொச்சகக் கலிப்பா.

இன்னல்லாஹ வென்றே குறுஆனிலே ஏகனாயகத் திறக்கிய தன்பயன், சொன்னன் யானு மலக்குகள் யாருமென் றாதர் மீதிற் சொல்லுஞ் ஸலவாத்தையே, பன்னியாரு மியம்புங்க ளொன்றிற்குப் பத்தியா னுரைப் பேனென்ற தாலது, தன்னையோதி னாரு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 1

மன்னர் மூஸா நபிக்கொரு மானிடன் மாறு செய்தவன் மாண்டடக் காத்திருந், தென்னவேயிரை யென்னடி யானிடத் தேகி நீர்கப னிட்டடக் கும்மவ, னுன்னியேநபி பேர்தவு ரூத்திற்கண் டோதினான் ஸலவாத்தென்றதாலது, தன்னையோதி னாருமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 2

நாதர் மூஸா நபிதான் கியாமத்து நாளில் நாவினிற்றுகம் வரா மலே, யோதவேயிறை யேவரியேனங்க ளேதையாறப்பு ஒன்றுரை யாயெனத், தூதராமிற சூல்ஸலவாத்தை நீர் சொல்லுந்தாக மூறு தெனச் சொன்னதாற், றூதனென்னையுமீரானு முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமே. 3

உங்கள் தீன்வழி யாயிருக் துங்கள்பே ரோதக் கேட்டுடனே ஸலவாத்தவன், புங்கமாயுரையாத பகீலனைப் போல் பகீலனிலை யெனத் தேவரீர், சங்கைநாவு கொண்டோதினதாலது தன்னையோ தவுந்தக்துங் கபுறினிற், றங்குநாளென்னை யானு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 4

காட்டு மானபி யேயுமைத் தான்பிணை கானகத்தினில் வைத் தினியான்வர, மாட்டேனாகி லுமதும்மத்தானவர் வள்ளலேயுங்கள் பேர்வரக் காதினிற், கேட்டுமே ஸலவாத்துரையார் வழி கேட்டிலாவ னென் றோதினதாலுமைச் சாட்டினே னென்னையானு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 5

மெய்சூர் ஆனை விரித்திறை யேவின வேதவாய்மை விலக்கு கன்னுசுகை, சிக்கிராப்பக லாப் பெரும்பாவமோ செய்தனி யானடியேனென்ன செய்குவேன், மக்கராஜ முஹம்ம தென்னும் ஸலவாத்தை யோதும் வரிசையினுலென்றன், சக்கராத்தினி லாளு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 6

துஞ்சுகாளுங் கபுறிலடங்கியே சோருகாளுங் கியாமத் தமளியாலஞ்சுகாளு மஹ்ஷறிலே அதா பானகாளு மடியா ரனைவருங், கெஞ்சுகாளு மிறைவனே காரென்று கேட்கு நாள் முஸ்தகீ மென்னும் பாலத்திற், றஞ்சமீ ரென்னையாளு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 7

தம்பிரான் சது வானத்துச் சூரியன் தன்னையே சவளத்துயர் வாகவே முன்பு காட்டி நிறுத்துமப் போதலே மூளைவெந்து மயங்கி அங்தோவென, வெம்பியேயழு காலை மஹ்ஷறு வேளையாள்பவர் நீரன்றி வேறில்லைத், தம்பமாக வந்தாளு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 8

வாருலாவுமட மயிலாசியா மங்கையாது மறியமுமேமணக், கோருலாவி யுமக்கருள் செய்மணக் கோலமாமஹ் மூதினிலேறிப் பொன், னூறுலாவி வருந்திருக்காட்சியு முண்மையாதி தீதாரையுங் காணவே தாருமீரென்னையாளு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 9

அல்லெல்லா நடக் தேசடங் தேழுவா னம்பரத்துயர் வாகியப் பாலரு, கில்லல்லாமுன மத்தஹியாத்தையே யியம்பவாதி திருவுளமானதாற், சொல்லெல்லாஞ் ஸலவாத்துஞ் ஸலாமுமே சொன்னதாலதையானுமியம்பினேன், ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமே. 10

ஸலவாத்துப் பாட்டு முற்றிற்று.

## முன்னோர்கள் பாடிய

# கப்பற் பாட்டு.

லாஇலா ஹயில் லல்லாஹு-இல்லல்லா
முஹம்மதுர் றஸூலுல்லாஹி-ஸூலுல்லா

(1) முத்ததினு லுதித்துவந்தோர் இல்லல்லா
மொருயாகதாய்ப் படைக்கவந்தோர் இல்லல்லா
கத்தனருள் சிறக்கவந்தோர் இல்லல்லா
கனகவிளக்காகி வந்தோர் இல்லல்லா

புத்திமதி ஹக்கனருளுட் பிரிவதாகிப், பொற்பதிக னித்தறுக நற்புவியும் வாழ்க, எத்திசையு மெய்க்க வொருபொற் பிரபையாகி, ஏகாந்தமான நவரத்தினமயிலாகிச், சுத்தமுடன்நான்கு மூலைக்கிணறு மாகித், துய்யகலிமாவதனினுட் பொருளுமாகிக், குற்றமணுகாத நபி கப்பல்கவி பாடக், கோமானே யெங்குதிறைசீமானீகாப்பு. லாயி

(2) அலிபுமரம் ஏருவாய் இல்லல்லா
அடுத்திடுதாலவங்க துவாய் இல்லல்லா
மெலிவில்லாஹேய் தலைமரமாய் இல்லல்லா
மிகுத்திடும் றேய் ரெங்கதுவால் இல்லல்லா

மலிவான தாலினைத் காம்பருவைத்து வளர்கின்றலாம தாற்கமர் பந்துகட்டிக் குலநலமீமினற் கபாலங்கனிட்டும் கோமான்றன் ஹேயினற் சிங்கஞ்சமைத்து வலியாத காபென்ற அணியம் பரப்பி வல்லவன் ஹாவென்ற சுக்கானை யேற்றிப்பெலமாக இவ்வெழுத் தால் வங்கம் வைத்தார் பேசுங்கண் மூன்றதாவலவருமே காண. லாயி

(3) நால்சிபத்துத் தரளமணி இல்லல்லா
நல்லபச்சை மலக்கூத்து இல்லல்லா
வாசஜபறாத்ததனில் இல்லல்லா
வருஞ்சிவப்பவளமது இல்லல்லா

ஆசையொரு மலகூத்து நற்கறுப்பதாகி-அழகான லாகூத்து தங்கமுடன் நல்ல ஓசை யுட்டாமறை பூப்பல துக்தூக்கி-உண்மை யெனு நானகலை மேற்கட்டிப் கட்டிப்-பேசுமொரு அவ்வலெனு நற் சொடியுமேற்றிப்- பிசகாமல் ஜல்ஜலெனு மேளந்தொனிக்கக்- காச கல் நால் பேர்கள் பாத்திஹா வோதிக்-கடல் மீதிற் கப்பலை யிறக்கின ரையா. லாயி

(4) பாயமரந்தான் பேயதனுன் இல்லல்லா
பகரும் தேய்தான் கிபுலாவாய் இல்லல்லா
ஆயுங்கவியாமரந்தான் இல்லல்லா
அடுத்ததொருதலாதனும் இல்லல்லா

தோயாமலிதுகள் நன்றாகவே கட்டித் துய்யலாய் சன்னபின்ன ஸாலாத்துமாக-நேயமுடன் காம்பருநாலெழு தனனும்-நிகரரிய சவுந்திரப் பாய்மரத்தேயுடன்-ஓயாத தூண்டாவிளக்கெழுத்தை

ுய் உண்மைசேர் வெற்றியா யொக்கத்துலங்க காயனருளீராறு பீரங்கித்தீர்ந்து கலமாக கற்சரக்கேற்றினுரையா. லாயி

(5) ஆனகலிமாவேற்றி இல்லல்லா
அளவுடன் ஈமானேற்றி இல்லல்லா
சீனத்துள்ள கப்பலிலே இல்லல்லா
சிறந்தமஹ்பூபேற்றி இல்லல்லா

தானமுடன் கிலாசுகள் தொண்ணூற்றியாருந்-தகுமாங் கணக்கர்தா மிருபேருமாக ஈனமில்லாச் சிறுங்கிருபேருமாக இயல்பான கப்பல் கருதானேக்கினேடும்-மானமுடனும் மாலினேருபேரினேடும் வளமானவங்கமதிலேறியே நின்று ஆனதொரு ஆகூகீயென் னுமே கல்ல-அழகான மந்திரப்பாய் விரித்தோடினர். லாயி

(6) காயல்நகர்கடல் கடிந்து இல்லல்லா
கன்னியகுமாரினிலத்திற்போய் இல்லல்லா
ஆயுமலையாஞ்சென்று இல்லல்லா
அடுத்த பொன்னுக்கையைக்கடந்து இல்லல்லா

மாயாதகண்ணூர் தலைச்சேரிகண்டு-வங்காரமான ஜன்கண்ணுடிவைத்து-ஒயாத அட்சரக்கயறு பாயேற்றி-ஓங்காரமானபகர் தன்னிலேயேறிச் சாயாதவண்ணமா யோடுமெப்போது-சத்துருக்கள் ளரையங்குளவர் கண்டுநீயாரு சொல்லெனக் காகி கூ வென-நேச மொழி கேட்டங்ஙனேடினுரையா. லாயி

(7) கள்ளக்கப்பல்தன்னைவென்று இல்லல்லா
கனத்தபகர் தனைக் கடந்து இல்லல்லா
தெள்ளியஜித் தாவிற்சென்று இல்லல்லா
சிறந்தலங்கர்விட்டிறங்கி இல்லல்லா

வள்ளல்மஹ் மூதுநபி மக்காவிற்சென்று-வண்மையுடனே கஃபாவைவலம் வந்து-விள்ளுமுறை ஆதநபி பாதங்கடந்து-வேவுமதினு நகரமெய்ப்போடு சென்று உள்ளஹ்மதாம் வெளியில்வாய் போற்றி நின்று ஒப்பானகாபகபு சைனியிற்சென்று மெள்ளவரு பள்ளிமஹ் மூதைக்கடந்து-மேலவன் கலவறத்திலானர்களையா. லாயி

(3) ஆனபொழுதேகனவன் இல்லல்லா
அரிய செய்கைதனைப் புகழ்ந்து இல்லல்லா
தீன் புகழும் நபியிரசூல் இல்லல்லா
செங்கமலப் பதம் புகழ்ந்த இல்லல்லா

தானுன ஏகனெலி முஹியித்தீன் பாதந் தப்பாமலெப்போதும் நட்ப்பாய்ப்புகழ்ந்து-கோனுன ஆதிருதறத்தைத் தெரிந்து-ருத்தூலுல்லாஹு நபியானுர்கள் நல்ல.தீனுன பேர்களிதை நன்ருய்த் தெளிந்து செயமுள்ளவோர் பொருளீ யென்றென்று நாடி-மனமொடு முற்றிடிப்பேறதிக முண்டாய்-வல்லவன் கிருபைமிகவளருமே ஐயர்.

கப்பற்பாட்டு-முற்றிற்று.

நாகூர் முஹம்மதுப் புலவர் பாடிய

# ஊஞ்சற்பாட்டு

---

தரு-இராகம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி-

ஆடவாங்கள் ஊஞ்சல் ஆடவாங்கள்
அன்னமே பொன்னூஞ்சல் ஆடவாங்கள்.

அநுபல்லவி.

ஆடவாங்கள் ஹூறுல்ஈன்களோடி வாங்கள்
ஆலநபியுல்லாமேற் பாடவாங்கள். (ஆட)

சரணங்கள்.

1 ஆதிபெரியோ னருளாற் கால்கண்ணுட்டி
யவனறு சொளிவாலே விட்டம் போட்டு
சீதமார்குறு சொளிவால் வடங்கள் பூட்டி
ஜன்னத்தி னுளிவசலே பலகை பாவிக்
கீதமுடன் ஹூறுல்ஈன்கள் கவரிவீசக்
கிருபையுடன் வானவராலாத்தியேந்த
ஆதமுத னபிமார்கள் வடந்தொட்டாட்ட
ஆலநபி மஹ்மூதாராடு மூஞ்சல். (ஆட)

2 பச்சைமர கதக்தன்னாற் கால்கணாட்டிப்
பவளவயிடூரியத்தால் விட்டம் போட்டு
நட்சத்திரங்கள் போலே வடங்கள் பூட்டி
நல்லமணி முத்ததினாற் பலகை பாவிக்
கச்சணிந்த ஹூறுல்ஈன்கள் கவரிவீசக்
ககனவர் கஸ்தூரியா லாத்தியேந்த
முச்சகம் புகழ் நபிமார் வடங் தொட்டாட்ட
முஹம்மதுர் றஸூல் நபினாராடு மூஞ்சல். (ஆட)

3 அதிகவொளிச் சூரியனாற் கால்கணாட்டி
யழகு நட்சத்திரத்தால் விட்டம்போட்டு
மதியொளிவு சந்திரனால் வடங்கள் பூட்டி
மறையாத மின்னொளிவார் பலகை பாவிப்
பதியொளிவு ஹூறுல் ஈன்கள் கவரிவீசப்
பச்சைக் கற்பூர ஆலாத்தியேந்த
கதிஜா ஆயிஷா இருவர் வடங்தொட்டாட்ட
காத்திமுல் நபியிருந் தாடுமூஞ்சல். (ஆட)

4 வயிரம்வயிடூரியத் தாற்கால் கணாட்டி
மாணிக்கத் தலத்தின்மேல் விட்டம் போட்டு
உயரொளிவு நீலமணி வடங்கள் பூட்டி
யோசை பொருஞ் சுவனமணிப்பலகை பாவி
நயமுட ஹூறுல் ஈன்கள் கவரிவீச
நறைகமழுங்குங்குமத் தாலாத்தி யேந்த
மைமூனா மாறியத்தும் வடங்தொட்டாட்ட
முஹம்மது றஸூல் நபினாராடு மூஞ்சல். (ஆட)

5 சிதுரத்துல் முந்தஹாவாற் கால்கணாட்டி
ஜென்னத்து பிருதவுசால் விட்டம்போட்டுக்
குதறத்தி னாலேசிலவடங்கள் பூட்டிக்
குலவுலௌஹூ மகுபூஹுல் பலகை பாவி
மதுரவாய் ஹூறுல் ஈன்கள் கவரிவீச
வானவர்கள் பன்னீரா லாத்தியேந்த
விதுவதன அபஸாவும் வடங்தொட்டாட்ட
வேதாம் பரால நபியாடுமூஞ்சல் (ஆட)

6. லாகூத்தினாலே யொளிக் கால்க ணாட்டி
நயமுள்ள மலக்கூத்தால் விட்டம் போட்டுத்
தீர்க்கமுள்ள ஜெபறூத் தால்வடங்கள் பூட்டி
ஜெயவொளிவு ஹூலறத்தாற் பலகைபாவி
வாக்கில் ஸலவாத்துடனே ஸவுதா உம்மா
வரிசையுள்ள றஹ்மாவும் வடக்தொட் டாட்டத்
தீர்க்கமுள்ள ஆலநபியாடு மூஞ்சல்
தீன்தீன் முஹம்மதனாராடு மூஞ்சல். (ஆட)

7. சந்தனத் தினாலிலங்கக் கால்கணாட்டி
தயங்க வொளியகிலதனால் விட்டம்போட்டு
வித்தையுள்ள குங்குமத்தால் வடங்கள் பூட்டி
விளங்குகின்ற கஸ்தூரிப் பலகை பாவிக்
கொத்துளவு ஹூறுல்ஈன் கவரிவீசக்
கூர்மையுள்ள உம்முஸல்மாவடக்தொட் டாட்ட
சுந்தரஞ்சே ராலநபியாடு மூஞ்சல்
ஜோதிநபி முஹம்மதனாராடு மூஞ்சல். (ஆட)

8. பொன்னொளி வினாலேசில கால்கணாட்டிப்
புகழொளிவினா லதின்மேல் விட்டம்போட்டு
மின்னொளிவு போலமுத்து வடங்கள் பூட்டி
மேன் மையுள்ள மரகதத்தாற் பலகை பாவிக்
கன்னியர்கள் ஹூறுல்ஈன் கவரிவீசக்
கதியுறும் உல்மூல்மார்க்கின் வடக்தொட்டாட்ட
மன்னர் புகழ் நபியிறஸூலாடு மூஞ்சல்
மக்கநகர் முஹம்மதனாராடு மூஞ்சல். (ஆட)

9. ஆணிப் பொன்ன தனாலே கால்கணாட்டி
யழகுமணி ரத்தினத்தால் விட்டம்போட்டு
மாணிக்க மிழைத்தமணி வடங்கள் பூட்டி
யாணிலங்குமதியமெனப் பலகைபாவி
சேணாட்டு ஹூறுல்ஈன்கள் கவரிவீச
ஸெயினபு நாச்சியார் வடக்தொட் டாட்ட
பூணாரமார்பி றஸூலாடு மூஞ்சல்
புகழ்பெற்ற நபிஇறஸூலாடு மூஞ்சல். (ஆட)

10. சித்திரத்தி னாலேசில கால்கணாட்டித்
தெள்ளமுதலின் பத்தால் விட்டம் போட்டு
வெற்றியுடனும் பொன்னால் வடங்கள் பூட்டி
மேவும் வயிடூரியத்தாற் பலகைபாவி
மத்திதனில் ஹூறுல்ஈன்கள் கவரிவீச
மறியம் ஆஸியா இருவர் வடந்தொட் டாட்ட
முத்திரை சேரால நபியாடு மூஞ்சல்
முஸ்தபா முஹம்மதனாடு மூஞ்சல். (ஆட)

11. தீக்கிறேளி வாலேசில கால்கணாட்டித்
தீர்க்கமுள்ள தஸ்பீகால் விட்டம் போட்டுத்
தக்குபீறு தன்னெளி வால்வடங்கள் பூட்டித்
தகையுடனே தகுலீலாற் பலகைபாவிப்
பக்கலிலே ஹூறுல்ஈன்கள் கவரிவீசப்
பண்ப பூபக்கருமர் வடந்தொட் டாட்ட
மக்கநகர் வாழரச ராடுமூஞ்சல்
முஹம்மதுர் றஸூல் நயினாடு மூஞ்சல். (ஆட)

12. அல்ஹம் து என்றதொரு கால்கணாட்டி
லில்லாஹியென்ற தன்மேல் விட்டம்போட்டு
நல்லதொரு றப்பி லென்ற வடங்கள் பூட்டி
நவிலுமொரு ஆலமீனர் பலகைபாவி
கல்புமகிழ் ஹூறுல்ஈன்கள் கவரி வீசக்
கதியுதுமா னாலியும் வடந்தொட்டாட்டச்
செல்வமுறும் ஆலநபியாடு மூஞ்சல்
ஸெய்யிது முஹம்மதனாடு மூஞ்சல். (ஆட)

13. சுல்த்தானி யென்றதொரு கால்கணாட்டிச்
சுத்தமுள்ள மலக்கானி விட்டம் போட்டுக்
குல்த்தானியென்ற தன்மேல் வடங்கள் பூட்டிக்
குலவுமொளிப் புறுக்கானிப்பலகைபாவி
வலமிடமுங் ஹூறுல்ஈன்கள் கவரிவீச
வள்ளல ஸனுஸைனும் வடந்தொட்டாட்டக்
குலத்திலுயர் குறைஷி நபியாடு மூஞ்சல்
கோசா முஹம்மத னாடுமூஞ்சல். (ஆட)

14. வல்லவன் றஹ்மத்தாற் கால்க ணூட்டி
வரிசையுள்ள நிஹ்மத்தால் விட்டம் போட்டு
நல்லதொரு ஆபியத்தால் வடங்கள் பூட்டி
நலமான கிருபையினாற் பலகைபாவி
வல்லியோர் ஹூறுல் ஈன்கள் கவரிவீச
வான்ஜிபுரீல் மீக்காயீல் வடந்தொட் டாட்டச்
செல்லுலவு கவிகை நபியாடு மூஞ்சல்
தீன்தீன் முஹம்மதனா ராடு மூஞ்சல். (ஆட)

15. வாசமுள்ள பூமரத்தாற் கால்க ணூட்டி
வடிவுள்ள வச்ரமணி விட்டம் போட்டு
நேசமுட னொளிவுடைய வடங்கள் பூட்டி
நேர்மையுள்ள பொன்னதனாற் பலகை பாவி
ஏசகன்ற ஹூறுல் ஈன்கள் கவரிவீச
இஸ்றாயீல் இஸ்றாபீல் வடந்தொட்டாட்டத்
தேசம் புகழ் நபியிற ஸூலாடு மூஞ்சல்
தீன்தீன் முஹம்மதனா ராடு மூஞ்சல். (ஆட)

114184

16. காபுகபு சைனியாற் கால்க ணூட்டிக்
கல்பென்ற சூட்சமதால் விட்டம் போட்டுச்
சாபசந்திர சூரியகலை வடங்கள் பூட்டிச்
சங்கைமக்கா மன்மஹ் மூத்பலகை பாவித்
தாபரதொண் ணூற்றறுவர் கவரிவீச
சங்கையுடனே வரங்கேக வடந்தொட்டாட்ட
சாபல்லிய முஹம்மதனா ராடு மூஞ்சல்
தாஜுல் அன்பியா இருந்தே ஆடு மூஞ்சல். (ஆட)

17. ஆலமசிசா மதனாற் கால்க ணூட்டி
ஆலமித லானதனால் விட்டம் போட்டு
ஆலமறு வாகதனால் வடங்கள் பூட்டி
ஆலபின் சானதனாற் பலகை பாவிச்
சாலவுமே முஹியித்தீன் வடந்தொட் டாட்டச்
சங்கையுள்ள ஹமீதென்னும் ஸாகிபென்ற
சீலமுறும் ஸிறாஜுத்தீன் மனத்திலுற்ற
ஸெய்யிது முஹம்மதனா ராடு மூஞ்சல். (ஆட)

ஊஞ்சற்பாட்டு-முற்றிற்று.

இ ஃ து

புதுச்சேரி ஒ. காதிறு முஹியத்தீனென்பவர் பாடிய

# கும்மிப் பாட்டு.

கும்மியடி பெண்ணே கும்மியடி-குபி ரோக்கியோடவே கும்மி யடி, நம்மையாளு மிறைவனே நிதமும் நாடி கும்மி யடியுங் கடி-தினம் தேடிக் கும்மி யடியுங்கடி 1

தானேதாஞ யிருப்பவனும் என்றும் தன்னத் தனிமையுடைய வனும், வானமும் பூமியும் போற்று மிறைவனே வணங்கிக் கும்மி யடியுங்கடி-மன-மிணங்கிக் கும்மி யடியுங்கடி 2

ஆலம்படையுணக் காரணமாய் நின்ற அண்ணல் முஹம்மது நன்னபிமேற் சாலவுமாஸல வாத்தினேயோதிச் சந்திக்க கும்மியடி யுங்கடி மனந் தொந்திக்கக் கும்மியடியுங்கடி 3

ஆதியினி லொளிவா யிருந்தே பின்னர் அப்துல்லா நெற்றியில் வந்துதித்தே, மாதாமினுர் பெற்ற வள்ளலேப்போற்றி மகிழ்ந்து கும்மியடியுங்கடி-மிகப்-புகழ்ந்து கும்மி யடியுங்கடி 4

எல்லா வஸ்தும் படைத்தவஞ மென்றும் ஈரேழுலகையுங் காப்பவனும், அல்லாவென்னும் பேர் கொண்டவன் தூதரை யடுக்க கும்மியடியுங்கடி-பவம்-விடுக்கக் கும்மி யடியுங்கடி 5

வானுலுகெங்கும் புகழ்ந்தேற்று மக்கமாநகர் தன்னிலவதரித்த தேனவிழ்மாலே முஹம்மது றஸூலேத் தெரிந்து கும்மியடியுங்கடி மனம் புரிந்து கும்மி யடியுங்கடி 6

அரம்பைக ளோடாசியாமறிய மிவ்-வவனியின் மருத்துவம் புகுதக், கருணையுலவப் பிறந்த முஹம்மதைக் கருதிக் கும்மியடியுங் கடி குழல்-சொருகிக் கும்மி யடியுங்கடி 7

ஞானமுந்தான மும்நல்லறிவு-மிக்கநாணமுமான முமுள்ளவ ராம், வானவர் போற்று முஹம்மது றஸூலே-வாழ்த்திக் கும்மி யடி யுங்கடி காத்தாழ்த்திக் கும்மி யடியுங்கடி 8

சுற்றிலுங் காதவழிலரசுறுங் கடிகை மன்னர் களீரற்குலே, முற்றும் நடுங்க நபிபட்டம் பெற்றோரை முடுகக் கும்மி யடியுங்கடி. மிகக் கடுக்க கும்மி யடியுங்கடி. 9

மஆஸீன் புதல்வனிருவருஞ் செத்து மரித்திடுஞ் செய்தி யறிந்தவுடன், துஆச்செய் தெழுப்பிய தூதரைப்போற்றித் துதித் துக் கும்மி யடியுங்கடி-மிக-மதித்துக் கும்மியடியுங்கடி. 10

வஞ்சனைத் தொழில்கள் வானுலகிற் செல்லமாட்டாதென்றெண் ணியே வாக்களித்தோர், நெஞ்சம் புழுங்க நிலவைப் பிளந்தோரை நினைந்து கும்மி யடியுங்கடி-துகில்-புனைந்து கும்மியடியுங்கடி. 11

ஒதுங்கியாமத்தில் மானிடர்கள் மிகவொடுங்கியலேயும் போதி னில், லாதாரஞ் சொல்லிவன்றூடும் நபிபுக ழறிந்து கும்மி யடியுங் கடி மலர் சொரிந்து கும்மி யடியுங்கடி. 12

ஹாஷீங்குலத்தி லுதித்தவராம் பனி ஆத மரபினிலுள்ள வராம், வாசனை வீசுமெய்த் தூதரின் தீன்மிக வலுக்கக் கும்மியடி யுங்கடி நிதஞ்சொலிக்கக் கும்மியடியுங்கடி. 13

ஸல்மான் பரிசுக் காண்டினிலீந்து தளிர்த்துக் காதணி காட ளித்த, செல்லார் கவிகை மாதர் தீன்மிகச் செழிக்கக் கும்மியடியுங் கடி பாவம் ஒழிக்க கும்மியடியுங்கடி. 14

திமிசுக்கிறைவ னீன்ற தசையினைச் சீர்பெறப் பெண்ணுரு வாக்கிவைத்த, அமரர் புகழும் அஹ்மதைப்போற்றி அன்பாய் கும்மியடியுங்கடி மிகுதெம்பாய் கும்மி யடியுங்கடி. 15

காட்டினில் வாழும் பிணைக்குப் பிணைநின்று காரணமானந்தம் காட்டிமறை, யேட்டிலடங்கா விறையவன் தூதரையிசைந்து கும்மி யடியுங்கடி மெள்ள அசைந்து கும்மி யடியுங்கடி. 16

பொல்லாச் சூத னிபுலீஸுங் தினம் புலம்பித்திரியப் பூதலத் தின் மல்லாடுங் காபிரை வென்ற முஹம்மதை வாழ்த்திக்கும்மி யடி யுங்கடி கரந் தாழ்த்திக் கும்மியடியுங்கடி. 17

வாடகஸ்தூரிவழி காட்ட வந்த வள்ளல் முஹம்மதர் வாக்கியத் தின் சாடைக்குளம் பொருந்தாதவர் தங்களை சாடி கும்மியடியுங்கடி. தமிழ்பாடி கும்மியடியுங்கடி. 18

வானுலகிற் சென்றியையுடனே மிக்க வார்த்தைகளாடியவள்
ளல் தந்த, தீனையிகழ்ந்து நடக்கின்ற தீமையார் தெளியக்கும்மியடி
யுங்கடி, இடை கெளியக்கும்மி யடியுங்கடி. 19

வாக்கும் மனமும் பொருந்தச் சொல்லும் கலிமாவின் பொருளை
மனதில் வையா, மக்களையே கன்வதைப்ப வென்றெண்ணியே வருத்
திக்கும்மியடியுங்கடி யுண வருந்திக்கும்மியடியுங்கடி. 20

நாளொன்றுக் கைந்து விசைவணங்காரந்த நாளில் நரகந்தனி
லிருந்தே, தேளொன்று கொட்டித் திகைப்பரென்றே மனந்தேம்பக்
கும்மியடியுங்கடி, மூகங்கூம்பக் கும்மியடியுங்கடி. 21

ஷறகின் தங்கடமின்றி நன்னேன்பைச் சட்டை செய்யாமலே
விட்டுவிட்டோர் நரகினிற்பசித் தலைவரென்றே நவின்று கும்மியடி
யுங்கடி மனம் புகன்று கும்மியடியுங்கடி. 22

கள்ளுசாராயந்தனைக் குடித்துச் சடைகஞ் சாயபீனை மிகப்
புசித்தே துள்ளிவிழுந்தலைந்தே நடக்கின்றவர் சுருங்க கும்மியடியுங்
கடி, எரிநெருங்கக் கும்மியடியுங்கடி 23

சூது சதுரங்கந் தன்னுடனே தினஞ் சொக்கட்டானுடுந் துடுக்
கரெல்லாம் வா திற்பொருளறிந் தோய்ந்தபின்றீயினில் வளரக் கும்மி
யடியுங்கடி விழி புரளகும்மி யடியுங்கடி. 24

கொண்டமனைவியை விட்டொருவன் கண்டகோதையின் மீதி
னிற் காதலுற்ற, மிண்டர்கள்தீயில் விழுந்தழிவாரென்றே வினவிக்
கும்மியடியுங்கடி, தீனைச்சினவிக் கும்மியடியுங்கடி. 25

இந்த கும்மியைப் படித்தோர்க் கும்மிகஇலங்க ஆச்சிற் பதித்
தோர்க்கும், மூந்துமிறையவன் றஹ்மத்துண்டென்றே வாழ்த்தி
கும்மியடியுங்கடி, வாழ்க எத்திக் கும்மி யடியுங்கடி. 26

கும்மிப்பாட்டு முற்றுப்பெற்றது.

இஃது

முன்னோர்கள் பாடிய

# தாலாட்டு.

காப்பு — வெண்பா.

பாருலகில் வண்ணப் பரிமளம் வீசும் மிறஸுல்
சீருலகிற் றாலாட்டைச் செப்புதற்கு—நேருடனே
பார்த்தானு மென்சொற் பழுது வாராதபடி
கார்த்தருள்வாய் நீயாதி காப்பு.

கண்ணிகள்.

சீர்கொண்ட ஆலமெல்லாஞ் சிறந்தஇஸ் லாந்தலைமக்
நேர்கொண்ட தீனைநெறி கொண்டு வந்தவரே 1

முன்னே யொளிவாகி முதலோன் றிருதூதராய்
பின்னே நபியாய்ப் பிறந்த முஹம்மதுவே 2

அண்ணலப் துல்லா அருமைமகவாக
பெண்ணினழகா மினார்பெற்றெடுத்த பாலகரே 3

அலிமாமுலை யருந்தியவரத்திலே வளர்ந்து
புலிமானொரு துறைநீர் உண்ணவந்த புண்ணியரே 4

திக்குத்திகாந்த மொடும் தேய்ந்தனக்குயர்ந்த
மக்கம் பிறந்து மதீனம் ஆளவந்தவரே 5

மட்டுலவுஞ் சொர்க்கம் வாழ்மடவார் தாலாட்டத்
தொட்டிலிற்றுயில் கொள்ளும் துய்யமுஹம்மதுவே 6

மாணிக்கத் தொட்டிலதைமடவர் பிடித்தாட்டப்
பூணிக்கையாய்க் கண்வளரும் புண்ணியராய் வந்தவரே 7

பார்க்கக்கன லெறியும் பாலைகடுஞ் சுரத்தில்
ஆர்க்குநன்னீரளிக்கும் அண்ணல் முஹம்மதரே 8

பாரமலைபோல் நாகம்பதியிற் படம் விரித்தே
நேரில்லா திருக்கக்கண்டு நீள் துரும்பால் வதைத்தோரே 9

கானகத்தி லாறுதனைக் கடுகவர வழைத்தே
யீனமில்லா நீரளிக்கு மெங்கண் முஹம்மதுவே 10

புதியகிண றுப்புநீர் பொங்கினும் பதங்கணவ
னதியழைத்துக் காட்டவந்த நன்மை முஹம்மதுவே 11

எங்க னயினாரே யெல்லவர்க்குங் தாயகமே
அங்கங் கஸ்தூரிவீச மழகார் முஹம்மதுவே 12

ஆதிபடைத்த அப்துக ளடங்க லுக்கும்
நீதிமணிப் பேரொளியாய் நின்ற முஹம்மதுவே 13

முத்தி லுதித்தவரே மூமின்கள் கைப்பொருளே
நித்தனருள் வேதப்படி நெறிநடத்துங்கோமானே 14

மஞ்சு குடைநிழற்ற மக்காவின் வீதி யெல்லாம்
கொஞ்சு விளையாடு மெங்கள் கோமான் முஹம்மதுவே 15

விண்ணி னரசே சதுர்வேத முஹம்மதுவே
கண்ணின் மணியே யெங்கள் காரணரே கண்வளரீர் 16

தேசப்பொருளே தெவிட்டாச் செழும்பாக
வாசத்திரு மேனிவள்ளல் முஹம்மதுவே 17

உற்றஅபூபக்கர்க்கும் உண்மை யுமர் தமக்கும்
மற்று நிகரில்லாத மருகரென வந்தவரே 18

செய்யுமுது மானார்க்குஞ் சிறந்தபுலி அலிக்கும்
வையும் புகழ் மாதுலராய் வந்த முஹம்மதுவே 19

சீராரிமாமஸனார் சிறந்த இமாமுஸைனார்
பேரார்நும் பேரெனப்பேறு கொள்ளவந்தவரே 20

கண்ணஸ்ஹாபிமார்கள் நாற்பத்திரா யிரர்க்கும்
கண்ணினொளி போலேகலந்திருந்த காரணரே 21

திக்குகளில் தீனிஸ்லாஞ் சேர்ந்தவும் மத்தோர்களையே
தற்காத்தேயாளும் ஷபாஅத்துக் குடையவரே 22

பங்கயப் பெற்றாள் பீவிபாத்திமா நாச்சியெனும்
மங்கையர்க்குந் தந்தையென வந்தமுஹம்மதுவே 23

அண்டர் புகழ்கதீஜா அங்கணவரென் றுலகோர்
கொண்டுபுகழ் வந்தகோமான் முஹம்மதுவே 24

எண்டிசையும் பாருமேகப் பெரும்பதியும்
அண்ட ருலகெல்லாம் அரசாளவந்தவரே 25

சூடேருந் தீயதனுட் சுழன் றெறியும் பாவிகளை
ஈடேற்றிக் காக்கவந்த வெங்கண் முஹம்மதுவே 26

மீனோடும் பேசிமிடி யருக்குவாழ்வு நல்கி
மானோடும் பேசுமெங்கள் வள்ளல் முஹம்மதுவே 27

வேம்பான காபிரும் மைவெட்ட வரும்வழியிற்
பாம்படையும் பொதும்பிற் பள்ளிகொள்ள வந்தவரே 28

நல்லநெறி யீமானு நானிலத்திலே தழைக்கக்
கல்லும்காய் பிடித்துவிடக் காட்டிவந்த காரணரே 29

தீமைதனைப் பேசுகின்ற செயலைக் கருவறுத்தே
ஊமைதனைப் பேசவைக்கு முண்மை முஹம்மதுவே 30

அறபுத்திரு நாட்டில் அடங்கலும் ஈமான் றழைக்க
குறைஷி பெருக்குலத்திற் கோமானாய் வந்தவரே 31

ஈமான் றழைக்க இஸ்லாம் பெருத்தோங்க
மாமானங் காக்கவந்த மன்னர் முஹம்மதுவே 32

நாயுமுடும்பு முசல் நவிலு நாற்கால் மிருகம்
பேயுநுந்த மோடெதிராய்ப் பேசவைக்குங் காரணரே 33

கல்லை வணங்குங் காபிர்களையே யறுத்து
நல்லநெறி யீமானை நாடேற்ற வந்தவரே 34

விரிந்த குபிர்காட்டை வெட்டி வழியாக்கிப்
பரிந்தபுக ழீமானைப் பயிரேற்ற வந்தவரே 35

செய்தவமெல்லாம் போற்றத் தீன்பயிரைத் தானேற்றிக்
கைவிரலானீ ரழைக்கும் ஹபீபு முஹம்மதுவே 36

கொந்தலமே யரசே கோசாலமானவரே
சந்தாப மில்லாத ஜாதிக்குல நாயகமே 37

குங்குமப்பூ மாலையணி கொற்றவர் களுக்கரசே
அங்கத்தொளிவீசு மண்ணல் முஹம்மதுவே 38

ஆராருங்காண வொண்ணா தந்திரத்தின் மேலேபோய்ப்
பேரார் பெரியவன் முன்பேசவே வந்தவரே 39

வேதமே நாவில் விளைவான வித்தகரே
பாதமணி தண்டாப் பயகாம்பர் கண்வளரீர் 40

பிடரிலணியாகப் பிறைபோலி லாஞ்சனையும்
படையேறி வென்றுவரும் பார்த்திபரே கண்வளரீர் 41

ஏகன் சமுகமதி லெக்கினெனு மரத்தில்
தோகை மயில்வடிவாய்த் தோன்றிவந்த நன்னபியே 42

முன்காணுக் தூரமட்டு முழுதுமது போலப்
பின்காணும் வள்ளலே பெருமையாய்க் கண்வளரீர் 43

வள்ளல் முஹம்மதுமேல் வாழ்த்துகின்ற தாலாட்டைப்
பிள்ளையின் பிரியம் போற்படிப்போர் களும்வாழி 44

மூமீமுஹம்மது தம்முத்தின் மொழி தாலாட்டைப்
பூமியிலெந்நாளும் போற்றுவோர் வாழியவே 45

பூமியின் மும்மாரிமழை மொழிக்தெவர் களும் வாழி
ஆமீனல்லா ஆமீன் யாறப்பில் ஆலமீனே. 46

தாலாட்டு முற்றுப்பெற்றது.

---

விருத்தம்.

அண்டர்கோன் புக மண்ண முஹம்மதின் ஆரணத்தை யறிந்துலகத்தினிற், கொண்டு நாளுங் குலவி நடந்திடாக் கொடியர் பாழ் நர குக்கிரையாவரேற், பண்டு நன்னபிமார்களு வப்புறும் பாக்கிய மார்க்கம்படியாமல் செய்தவர், கண்டுமென் மொழிக்கன்னியர் வாழ்ந்திடுன் கனககாட்டைக் கையாளுவர் நாளுமே.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

முன்னோர்கள் பாடிய

# தோழிப்பெண் பாட்டு.

காப்பு—வெண்பா.

தோழிப்பெண் பாட்டைத் தொகுப்பாயுரைப்பதற்கு
ஆழிசூழெவ்வுலகு மமைத்தோனே—வாழியுறும்
அல்லாவேயென்றனக் கன்பருளையே நிதமும்
வல்லானே யீந்தருளுவாய்.

கண்ணிகள்.

அரியவனே பெரியவனே ஆயிரம் பேருடையவனே
உரியவனே ருடையவனே யுலகமெல்லாம் படைத்தவனே 1

உலகமெல்லாம் படைத்தவனே யுண்மையுள் மெய்ப்பொருளே
பலமலையும் அலைகடலும் படைத்தழிக்குங் காரணனே 2

காரணனே யாரணனே கருத்தறியுங் கோமானே
பூரணனே நீரலை சூழ் பூலோக முடையவனே 3

பூவுலகம் வானுலகம் போற்றி செய்யும் புண்ணியனே
மூவுலகங்கொண்டாட முக்கியமாய்ப் பாடுகிறேன் 4

தோழிப்பாட்டுப் பாடுகிறேன் சோதியுள்ள மன்னவனே
வாழியருள் தந்தேநீ வண்மையாய்க் காத்தருள்வாய் 5

காத்தருள்வாய் காத்தருள்வாய் கர்த்தாவே காத்தருள்வாய்
பார்த்தருள்வாய் இருமையினும் படைத்தவனே யுன்னருளால் 6

மதித்தபெரும் புதுமையைக்கேள் மக்கமெனு மோர்பதியம்
கதித்தபுகழ் அவ்வூரில் கஃபத்துல்லாப் பள்ளிபெண்ணே 7

கஃபத்துல்லா பள்ளியினுட் காரணங் களும் மிகுதி
ஆபத்தெல்லாம் நீங்கிவிடுமன்னமே தோழிப்பெண்ணே 8

கன்னிலமாம் பொன்னிலத்தில் நபிவாழு நல்லிடமாம்
பொன்னிலமு மெவ்வாதாம் பூமிக்கெல்லாம் பொதுத்தலமாம் 9

பூமிக்கெல்லாம் பொதுத்தலமாம் பொழுது நிலா விலகிடுமாம்
சேமமுள்ள வரிசைபலசேர்ந்த தலந்தோழிப்பெண்ணே 10

பதியடுக்க நாடுபவர் பாவமெல்லாந் தீர்த்திடுமே
நதியழைத்த நபியிறஸூல் நாடுந்தவந்தோழிப் பெண்ணே 11

நன்மதிசேர் மக்கமதில் நபியிறஸூல் பிறந்ததலம்
பொன்மதில் சூழ்கோட்டையுடன் பூங்கமுகுச் சோலைகளும் 12

பூங்காவனங்களினுள் பூமணங்கள் வீசிடுமாம்
ஆங்கானவூரில் அறபாத்துமலை தோழிப்பெண்ணே 13

அறபாத்து மலையிடத்தில் ஹஜ்ஜுசெய்ய நன்மையுண்டாம்
நிறைவேற்றுங் கருமமெல்லாம் நேராகுந் தோழிப்பெண்ணே 14

நேராக வானோர்கள் நித்தம் வந்திறங்குந்தலம்
பாரோர் புகழுகின்ற பள்ளியுண்டுந் தோழிப்பெண்ணே 15

பள்ளிக்கெதிராகப் பத்துக்கொடி பறக்கும்
வெள்ளிப்போல் மனாருவிளங்கிடுமே தோழிப்பெண்ணே 16

மெத்தபயத்துடனே மேலோன் வணக்கஞ்செய்வார்
குத்துபா அன்று குறுஆன் முழங்குந் தோழிப்பெண்ணே 17

அந்தமுள்ள இலுறுகபி யழகாக னுந்தங்கண்
புந்தியுறப் பெரியோனைப் புகழுவார் தோழிப்பெண்ணே 18

அவரவர்கள் வந்தங்கலங்காரமாயிருந்தே
திவழுகின்ற பள்ளியினுள் தீன் கலிமாமுழக்கிடுவார் 19

தீனிறஸூல் தானிருந்த திருமனையு மவ்விடமே
வானொளிவு மவரொளியில் மறைந்து வெளிதோன்றிடுமே 20

தோன்றும் நபிநாயகத்தைச் சூழ்ந்து மிருப்பவர்காண்
என்று சொல்லும் பெருமை தன்னை எண்ண தொலையாதே 21

எண்ணத்தொலையாதே யிறஸூல் தம்மெய்யொளிவு
கண்ணுக்கடங்காதே கல்புகுளிர்ந்திடுமே 22

கல்புகுளிர்ந்தே நிதமுங்கருமமெல்லாந் தீர்த்திடுமே
செல்வம் பெருகிடுமே ஜென்னத்து முண்டாகிடுமே 23

பண்ணமைந்த பீவிபாத்திமா நாயகத்தின்
எண்ணமைந்த பாவாவின் சபாஅத்து முண்டாமே 24

சீராரஸனுஸைனர் செல்வரிருவருந்தான்
வீரார்முடித்தரித்த வெற்றியுள்ளோர் தோழியரே 25

ஓரடுக்காந் தோழிப்பெண்ணே ஓதுங்கலிமாவை
ஈரடுக்காந் தோழிப்பெண்கள் எண்ணித் தொழுதிடுங்கள் 26

மூவடுக்காம் ஸக்காதீங்கள் மூத்தானகையாலே
நாவடுக்காம் தீநரகம் நம்மளவில் நாடாதே 27

நாலடுக்காந் தோழிப்பெண்கள் நன்றிதரும் நோன்புதனை
மாலடுக்கவே பிடிப்பீர்வாழ்வு வருந்தோழிப்பெண்காள் 28

அஞ்சடுக்காந்தோழிப்பெண்காள் ஹஜ்ஜுதனைச் செய்திடுவீர்
நஞ்சடைந்த தீனரக நம்மளவில் நாடாதே 29

ஆறடுக்காந் தோழிப்பெண்காள் அல்லா ஒருவனென்றும்
மாறடுக்காதே புகழவாழ்வு வருந்தோழிப் பெண்காள் 30

ஏழடுக்காந் தோழிப்பெண்காள் ஏகன் மலக்குகளாய்
தாழடுக்காதவர்களென்று தானறிவீர் தோழிப்பெண்காள் 31

எட்டடுக்காந் தோழிப்பெண்கள் இறங்கியநால் வேதமுடன்
மட்டுமொழியாம் ஸுஹ்பும்வல்லோன் மொழிதோழிப்பெண்காள் 32

ஒன்பதுவாம் நம்பிறஸூல் உள்ளநபிமார்களெல்லாம்
அன்போடிறைதூத ரென்றறிந்திடுவீர் தோழிப்பெண்காள் 33

பத்தடுக்காகின்றதுதான் பலவுயிரெல்லாம் மெழுப்பி
கத்தனன்மை தீமைகளை கேட்கிறதாந் தோழிப்பெண்கள் 34

ஆகப்பதினோர் காரியமும் ஆகுமே யவனிடத்தில்
நாயனொருவன்றானே நன்மைக்குப் பயமல்லாமல் 35

ஓதரிய தீமைதனக் கையமில்லை தோழிப்பெண்காள்
நீதியுடனிந்தபடி நீங்கள் அறிந்துகொள்வீர் 36

உண்மையுள ஆதநபி யுவந்தபஜர்த் தொழுகை
வண்மையுடனே தொழுகவருவீர்கள் தோழிப்பெண்காள் 37

வேத இபுறுஹீம்நபி வேண்டும் லுஹறுத்தொழுகை
மாதர்களே நின்றுதொழவாருங்கள் தோழிப்பெண்காள் 38

வெற்றியூனுஸ் நபிவிளங்கும் அஸறுத்தொழுகை
பற்றியதைத்யே தொழுக வாருங்கள் தோழிப்பெண்காள் 39

தானவரா மூஸாநபி தம்மஃரிபத் தொழுகை
மானமுடனே தொழுகவாருங்கள் தோழிபெண்காள் 40

ஈஸாநபி தொழுதாரினிய இஷாத்தொழுகை
கூசாமலேதொழுகக் கூடிவாரும் தோழிப்பெண்கள் 41

இஷாவதனில் நம்மிறஸூல் இறைஞ்சும் வித்றுத்தொழுகை
ஆசாரமாய்த் தொழுக அங்ஙன்வாருந் தோழிப்பெண்காள் 42

அன்னமே தோகையரே அழகாரும் பெண்குயிலே
சொன்னமே பைங்கிளியே தொழுதிடுவோம் நன்றாக 43

அல்லாவின் தூதுவரை ஆலநபி யானவரை
வல்லாண்மைகொண்ட முஹம்மதுர் றஸூல்நபியை 44

கிட்டாத நன்னபியைக் கீர்த்திபெறுங்கடலைக்
கட்டாணி முத்தொளிவை ஹபீபிறஸூலானவரை 45

சிந்தாமணியான தீன்விளக்க வந்தவரைக்
கொந்தாலமானவரை கோஜாலமானவரை 46

சந்தாபமில்லாத ஜாதிகுல நாயகத்தை
மூந்த வுதித்தவரை மூமின்கள் கைப்பொருளை 47

மூத்தாயுதித்திருந்த முஹம்மதுர் றஸூல்நபியை
நித்தம் புகழ்ந்திடுவீர் நேசமுள்ள தோழிப்பெண்காள் 48

சுத்தமுள்ள நிறஸூல் சுந்தரமாய் பெற்றெடுத்த
பத்தினி பாத்திமத்தின் பலன்ஷபா அத்தும்பெறுவீர். 49

ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்
தோழிப்பெண் பாட்டு முற்றுப்பெற்றது

---

இஃது இராமநாதபுரம் இரவுன் ஷாப்புக்கடை
ப-வெ-முஹம்மது இபுறுஹிம் ஸாஹிபு முயற்சியால்
குலசேகரப்பட்டணம் சர்க்கரை ஸாஹிபுத் தம்பியவர்கள் குமாரர்
அல்லாபிச்சை புலவரவர்களால்
இலக்கண இலக்கிய வழுவறத் திருத்தியபடி அச்சியற்றியது.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்றஹீம்

இது

காயற்பட்டணம்

கண்ணஹ்மது-மகுதூம் பிள்ளையவர்கள் குமாரர்

## மகுதூ முஹம்மது புலவரவர்கள் பாடிய பாடல்

# ஹக்குபேரிற் புகழ்பத்து.

முதல்வெண்பா

காக்கும் பெருங்கருணைக் கத்தனே நித்தமனம்
பூக்குந் திருக்கருணைப் பூமானே—நோக்குநர்க
ளேகமெலா நீயதனால் * நூற்றலேன் சிற்றடிமை
வாங்கிருந்து நல்லருள் செய்வாய்.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

கணிக்குங் கனிதத்தடங்காத கருணைகடலே கற்பகமே
பிணிக்கும்வறுமை தனிலடிமை பேதத்துழலா தெவ்வினையுந்
தணிக்கு மருந்தே சஞ்சீவித் தருவே தாஹா நபிபொருட்டா
லணிக்கண்கிருபை செய்தருள்வா யகதேயாதி றஹ்மானே. (1)

எண்ணங்களை யொருகோடியெடுத்தே மனதுவாட்டமிக
நண்ணுமடியேன் றுயரகற்றி நவிலுமுனது கிருபைமழைத்
தண்ணம் பொழியச் செய்தருள்வாய் தனியே முதலே தற்பரனே
விண்ணம்பரமும் படைத்தளிக்கும் வேதப்பொருளே றஹ்மானே.

கூவித்துயர முரைதுடலங் குலுங்கவிரு கண்ணீரடியிற்
பாவிப்பெருக வழுதடிமை பல்காலிரக்கு மிரப்புமொழி
காவிட்டிரையா திருந்தகத்தி னுடியிரக்கு மிரப்புமறி
கோவிற் பன்னீயாகையினாற் குறைகதீர்ப்பாய் றஹ்மானே. (3)

திருத்தும்பொருளே புகழ்குரிய தேவேபாவே தெள்ளமுதே
வருத்தமிகவே புரிந்துடலை வாட்டும்வறுமை தனிலடிமை
கருத்து மனமுங் கலங்காமற் காக்குமுனது கருணைமழை
யருத்தம்பொழிவா யெவ்வுலகு மரசாளரிய றஹ்மானே. (4)

---

* நூற்றல் சொல்லல் இதுமயக்கம் இராமாயண மவையடக்கத்திற் காண்க

ஈரற்கொழுந்தே குலக்கொழுந்தே யிறைவர்க்கிறையேயுயர்ப் பினத்தின்
பாரக்கிறமை யறிந்தவைக்கேர்ப்பன வூனிரணங் கொடுப்பவனே
கேரத்தியலெல்லாந் தெரிவைநீயாதலினு லடிமைதுயர்
தீரக்கிருபைக் கடலமுதந் தெவுட்டத்தருவாய் றஹ்மானே. (5)

முத்திப்பொருளே தவப்பொருளே மோனப்பொருளே நல்லடியார்
பத்திப்பொருளே பவமறுக்கும் பாரப்பொருளே பாக்கியமார்
சித்திப்பொருளே யெம்மனதுந் தெரியும்பொருளே யேழைகலி
கொத்திப்பிளந்து க்ஷேமப்பொருள் கொடுப்பாய் துய்யறஹ்மானே. (6)

தெரிந்துந் தெரியாதடியார்கள் செய்யும்பிழைக டரநின்பாற்
பொருந்தியிரங்கிக் கேட்கிலுடன் பொருதுக் கிருபையணிப்பனெனத்
திருந்தவறு திநீயுரைத்ததிறனுலெளியேன் பவமகற்றிப்
பரிந்த கருணைபுரிவாயெ புயப்படைப்பும் படைத்தறஹ்மானே. (7)

நந்தாவொளியே பேரொளியே நபிநாயகத்தை யெங்களுக்குத்
தந்தாதரித்தே யறிவாலுன் றனையுமெனையு மறிந்துய்யக்
கொந்தார் குறுஆனைக்கொடுத்த குருவே மருவே சிற்றடியன்
சிந்தா குலங்கள் கற்றியருள் செய்வாய் மெய்மை றஹ்மானே. (8)

எத்தி யிரங்கித் தவுபாசெய் திரவும்பகலுஞ் சிற்றடிமை
பாத்திஹாவு மிகுலாசும் படித்துப் படித்தே யிரக்குழுனு
ஜாத்திற்கிரங்கி வறுமைபிணி சாறாதகற்றி யருளளித்துக்
காத்துக்கிருபை செயவேண்டுங் கருணைகரனேறஹ்மானே (9)

அல்லும்பகலு நித்திரையும்மதுவே தொழிலாய் நின்னுமஞ்
சொல்லுமருதூ முஹம்மதென்போன்று நித்தப்புகழுமுனுஜாத்தை
வெல்லுங்கரும மதற்காக விரும்பிப்படித்தோர் கேட்டிருந்தோ
ரல்லலகற்றி நல்வரிசை யருள்வாயருள் வாய்றஹ்மானே. (10)

ஹக்குபேரிற் புகழ்பத்து முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras 26—10—51.

## முஹ்யித்தீன் ஆண்டவர்கள்

### காரண சரித்திரம்.

இதாகிறது கல்விக்கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துபுர் றப்பானி வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினா முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும், கஷ்பு கறுமத்துகளில் நின்றும், அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதியிருந்த கிதாபை தமிழில் மொழி பெயர்த்து "முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்" என்னும் நாமமிட்டு அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3-0-0

### மஜ்மூஅ முனாஜாத்.

சுத்த தமிழ்.

(முதல் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத், யாஸையிதி மாலை, யாகுத்பா மாலை, தலைபாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, மூத்துமணி மாலை, பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தேனவாஸ் முனாஜாத், சரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்து பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை அணா 8.

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.